புலமைக்கதிர் 5

புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்-

12

2020


பத்திரம் I

பெயர் :.....

45 நிமிடம்


1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்துஅதன்கீழ் கோடிடுக.

01. முதல் உருவில் இருந்து வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.



1. 2. 3.

02.



1. 2. 3.

03. தாகம் - தண்ணீர் போல் பசி - .....

1. உணவு 2. மருந்து 3. பானங்கள்

04. வீரன் - வாள் எனின் எழுத்தாளன் - .....

1. பேனை 2. புத்தகம் 3. ஆசிரியர்

05. அதிகாலையில் **கதிரவனின்** ஒளி பட்டு **செந்தாமரை** மலர்கள் மலர்ந்தன.

1. பூக்கள், சூரியனின் 2. சந்திரன் , புஸ்பம் 3. சூரியனின், புஸ்பங்கள்

06. வானத்தில் **விண்மீன்களின்** காட்சி அழகாக இருந்தன.

1. செய்மதிகளின் 2. முகிற்கூட்டத்தின் 3. நட்சத்திரங்களின்

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு 07ஆம், 08ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

மீனினம் ஓடிப் பறக்குதம்மா - ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா
வானும் கடலாக மாறுதம்மா - இந்த
மாட்சியிலுள்ளம் முழுகுதம்மா

07. இப்பாடலில் வர்ணிக்கப்படும் காட்சி.
1. கடற்கரைக்காட்சி
2. நட்சத்திரங்களின் ஊடே சந்திரன் பவனி வரும் காட்சி
3. ஆகாயம் கடலாக மாறும் காட்சி

08. ஆகாயத்தை எதற்கு உவமையாக கூறப்படுகின்றது.
1. மீனினத்திற்கு 2. ஓடத்திற்கு 3. கடலிற்கு

09. பின்வரும் சொற்களில் மூன்று சொற்களை ஒரு கூட்டமாகவும், இரண்டு சொற்களை வேறொரு கூட்டமாகவும் பிரிக்கலாம். அந்த இரண்டு கூட்டங்களிலும் அடங்காத சொல் எது?

பேனை, புத்தகம், பென்சில்கூராக்கி, கத்தரிக்கோல், வெண்கட்டி, பென்சில்

1. புத்தகம் 2. வெண்கட்டி 3. கத்தரிக்கோல்

10. பின்வரும் எண்களுள் மூன்று இலக்கங்களை ஒரு கூட்டமாகவும் இரண்டு எண்களை வேறொரு கூட்டமாகவும் பிரிக்கலாம்.

(75) (45) (15) (60) (30)

1. 30, 60 2. 60, 75 3. 15, 75

11. பின்வரும் பந்தியில் A, B ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

சுந்தரன் A ..... அதிக ஆர்வம் காட்டுகிறான். இவ்வருடம் தரம் 5 புலமைப் பரீட்சைக்குத் தோற்ற உள்ளான். பரீட்சையில் அதிக புள்ளி பெற எதிர்பார்க்கின்றான். எனவே சுந்தரன் இப்போது B ..... படிக்கின்றான்.


1. ஆர்வத்துடன், படிப்பில் 2. விளையாட்டில், நன்றாகப் 3. படிப்பில், ஆர்வத்துடன்

12. பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.
1. நாம் மலர் பரிப்போம்.
2. நாம் மழர் பறிப்போம்
3. நாம் மலர் பறிப்போம்.

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

13 ம் வினாக்களில் 14 ம் வினாக்களில்....

13. இடைவெளிக்குப் பொருத்தமான எண் யாது?




(1) 7 (2) 5 (3) 4

14. இடைவெளிக்குரிய எண் எது?

6	.....	12
8	24	3
2	1	4

(1) 6 (2) 9 (3) 24


1 தொடக்கம் 6 வரை இலக்கங்கள் எழுதப்பட்ட தாயக்கட்டையானது கீழே தரப்பட்டுள்ளது.



15. 6 இன் எதிர்ப்புறத்தில் உள்ள இலக்கம் எது?

(i) 2 (ii) 4 (iii) 3

16. இப்படத்தில் எத்தனை சதுரங்கள் உள்ளன?



(i) 6 (ii) 7 (iii) 8

17. 1996 டிசெம்பர் 31 ந் திகதி எத்தனையாம் நூற்றாண்டின் எத்தனையாம் தசாப்தத்தைச் சேர்ந்தது?

1. 19 ஆம் நூற்றாண்டின் பத்தாம் தசாப்தம்
2. 20 ஆம் நூற்றாண்டின் பத்தாம் தசாப்தம்
3. 21 ஆம் நூற்றாண்டின் பத்தாம் தசாப்தம்

www.lkedu.lk

18. ஒரு பண்ணையில் ஆடுகளும் கோழிகளுமாக மொத்தம் 9 பிராணிகள் உள்ளன. அப்பிராணிகளின் கால்களின் மொத்தத் தொகை 28 ஆகும். பண்ணையிலுள்ள கோழிகளின் எண்ணிக்கை யாது?

1. 3 2. 4 3. 5

19. 0 தொடக்கம் 100 வரையான எண்களை எழுதும் போது 0, 9 ஆகிய இலக்கங்கள் முறையே எத்தனை தடவைகள் இடம் பெறும் ?

1. 12 , 20 2. 11 , 12 3. 12 , 11


20. ஜூலை மாதத்திலும் ஓகஸ்ட் மாதத்திலும் உள்ள மொத்த நாட்களின் எண்ணிக்கை ?

1. 60 2. 61 3 . 62

21. ஒவ்வொரு மணித்தியாலயத்தின் ஆரம்பத்திலும் ஒரு குரங்கானது 30 மீற்றர் ஏறி ஒவ்வொரு மணித்தியாலயத்திலும் 20 மீற்றர் கீழே சறுக்குகிறது. காலை 7.00 மணிக்கு ஏறத் தொடங்கினால் நிலத்திலிருந்து 120 மீற்றர் உயரத்திலுள்ள வாழைப்பழத்தை தொட எத்தனை மணியாகும் ?

1. பிற்பகல் 5.00 2. பிற்பகல் 6.00 3 . பிற்பகல் 7.00

கீழ்வரும் வரிப்பட உதவியுடன் அடுத்துவரும் இரண்டு வினாக்களுக்கும் விடை தருக?



(1) (2) (3)

இதன்படி இவ் உருவை இரண்டாக மடித்து (2) முறிகோடுகள் வழியே வெட்டி நீக்கும் (3) போது தோன்றும்

22. முக்கோணிகள் எத்தனை?

1. 6 2. 4 3 . 2

23. சதுரங்கள் எத்தனை?

1. 0 2. 1 3 . 2

24.வட்டவடிவான மைதானத்தைச் சுற்றி 5m க்கு ஒரு பூமரம் வீதம் நாட்டியுள்ளனர். இரு பூ மரங்களுக்கிடையில் 2 பூச்சாடிகள் வீதம் வைத்துள்ளனர். நாட்டப்பட்டுள்ள பூமரங்களின் எண்ணிக்கை 50 ஆயின் மைதானத்தைச் சுற்றியுள்ள பூச்சாடிகளின் எண்ணிக்கை யாது?

1) 20 2) 18 3) 8

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

கீழ்வரும் வரிப்பட உதவியுடன் அடுத்துவரும் இரண்டு வினாக்களுக்கும் விடை தருக?

சீனி 1kg + **பருப்பு** 1kg	=	ரூபாய் 310.00
தேயிலை 250g + **செத்தல் மிளகாய்** 500g	=	ரூபாய் 450.00

25. **சீனி** 500g + **பருப்பு** 500g ஆகியவற்றின் விலை யாது?

1. ரூபாய் 310.00 2. ரூபாய் 600.00 3. ரூபாய் 310.00

26. **தேயிலை** 1kg + **செத்தல் மிளகாய்** 2kg ஆகியவற்றின் விலை யாது?

1. ரூபாய் 1800.00 2. ரூபாய் 900.00 3. ரூபாய் 1600.00

கீழ்வரும் வரிப்பட உதவியுடன் அடுத்துவரும் இரண்டு வினாக்களுக்கும் விடை தருக?

□ + △ = 400

□ - △ = 300 எனின்

27. □ இன் பெறுமதி யாது?

1. 300 2. 250 3. 350

28. △ இன் பெறுமதி யாது?

1. 350 2. 300 3. 50

29. ஓர் அலுவலகத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் 9 பேர் தமக்கிடையே ஒருவருக்கொருவர் கை குலுக்கிக் கொண்டனராயின் அங்கு எத்தனை கைகுலுக்கல்கள் நிகழ்ந்திருக்கும் ?

1. 36 2. 72 3. 81

30. கீதா தனதுகையில் வைத்திருந்த 48cm நீளமான தடி ஒன்றினை இரண்டு துண்டுகளாக முறித்தாள். முறிந்த துண்டில் சிறிய துண்டினால் பெரிய துண்டை அளந்து பார்த்த போது சிறிய துண்டைப் போல் 3 துண்டுகளைப் பெரிய துண்டில் முறிக்கக் கூடியதாக இருந்தது எனின் பெரிய துண்டின் நீளம் யாது?

1 . 24 cm 2. 30 cm 3. 36 cm

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

31. ஒரு பெட்டியினுள் ஒரே மாதிரியான 7 சிவப்பு மாபிள்களும் 8 நீல மாபிள்களும் 11 பச்சை நிற மாபிள்களும் உள்ளன.கண்ணை மூடிக்கொண்டு ஒருவர் பெட்டியினுள் இருந்து ஒரு நீல நிற மாபிளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆகக்குறைந்த எண்ணிக்கையான எத்தனை மாபிள்களை வெளியே எடுக்க வேண்டும் ?

1. 8 2. 11 3. 19

32. **பாடு படுபவர்க்கே - இந்தப்**
பாரிடம் சொந்தமையா !
காடு திருத்தி நல்ல - நாடு
காண்பதவரலவோ?

மேலே காணப்படும் பாடலில் யாரைப் பற்றிக் கூறப்படுகிறது ?

1. பாடகன் 2. உழவன் 3. வேடன்

33. மேசைக்கு 4 கால்களும் கதிரைக்கு 4 கால்களும் வீதம் 36 கால்கள் உள்ளன. இங்கு 2 மேசைகள் இருப்பின் எத்தனை கதிரைகள் இருக்கும்?

1. 8 2. 7 3. 9

34. 

இக் கடிகாரத்தைக் கண்ணாடியில் பார்க்கும் போது கண்ணாடியில் தோன்றும் நேரம்.

1. 2.00 மணி 2. 2.45 மணி 3. 10.10 மணி

35. தீபனின் மகள் பவானி , சந்திரனின் மகன் தீபன் எனின் சந்திரனின் மனைவியை பவானி அழைக்கும் முறை யாது?

1. அம்மா 2. பாட்டி 3. மாமி

36. கட்டடம் ஒன்று கட்டி முடிப்பதற்கு 20 மாதங்கள் தேவை. இக்கட்டடம் 2020 தை மாதம் கட்ட ஆரம்பிக்கப்பட்டால் அவ் வேலை முடிவடையும் காலம்?


1. 2021 தை 2. 2021 ஆவணி 3. 2022 பங்குனி

37. பங்குனி மாதம் 31 ஆம் திகதி வியாழக்கிழமை எனின் அம்மாதத்தில் வரும் செவ்வாய்க்கிழமைகளின் திகதிகளின் கூட்டுத்தொகை.

1. 75 2. 80 3. 85

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

38.உணவு, சிற்றுண்டி, வடை என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் A இனால் காட்டப்படுவது யாது?



1. உணவு
2. சிற்றுண்டி
3. வடை

39. ஒவ்வொரு மணித்தியாலமும் 5 நிமிடங்கள் முந்திக் காட்டும் கடிகாரம் ஒன்று மு.ப 6.00 மணிக்கு சரியான நேரத்திற்கு சீர் செய்யப்பட்டு வைத்தால் நண்பகல் 12.00 மணிக்கு கடிகாரம் காட்டும் நேரம்.

1. 12.30
2. மு.ப 11.30
3. மு.ப12.30

40. கின்சிலியின் வயது 27 வருடங்கள். நேகுலன் கின்சிலியிலும் இரண்டு வருடங்கள் வயதில் கூடியவன். லாசர் நேகுலனைக் காட்டிலும் 5 வருடங்கள் குறைந்தவன். மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

1. 34
2. 59
3. 80

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

புலமைக்கதிர் 5

புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்-

12

2020

பத்திரம் II

பெயர் :.....

1மணி 15 நிமிடம்

01) பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.
கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

நாம் எப்பொழுதும் சுத்தமாக இருப்பதோடு எமது வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சுகமாக வாழ்வதற்குத் தூயகாற்று, தூய நீர், தூய உணவு, தூய சூழல் என்பன அவசியமாகின்றன. சுத்தமாக இல்லாவிடில் சூழல் மாசடைந்து துர்நாற்றத்தை ஏற்படுத்தும். நுண்ணிய அங்கிகள் பல உருவாகி, பெருகித் தொற்றுநோய்களைப் பரப்பும்.

1. தொற்றுநோய்கள் பரவுவதற்கு எவற்றின் பெருக்கம் காரணமாகின்றது.
.....
2. தன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.
.....
3. நாம் சுகமாக வாழ்வதற்கு அவசியமானவை இரண்டு எழுதுக.
.....
4. 'நாற்றம்' என்பதன் எதிர்க்கருத்துச்சொல்
.....
5. முதலாவது வாக்கியத்தில் மடக்கேறு கொண்ட சொல்லைத் தெரிந்து எழுதுக?
.....
6. பரப்பும் என்பதால் உணர்த்தப்படும் காலம் எது?
.....

02) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து புள்ளிக்கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.

1. சூரியனது ..... உட்புகாத மரங்கள் அடர்ந்த காடு அது.
(ஒளி, ஒலி, ஒழி)
2. பாடசாலையின் மணி ..... சில நிமிடங்களின் முன்னர் கேட்டது.
(ஒளி, ஒலி,ஒழி)

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

03) விடை எழுதுக .

01. அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா:

……..

02. எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா:

……..

04) சேர்த்து எழுதுங்கள்

1. வாள் + போர் = ……
2. முள் + வேலி = ……

05) விடை தருக?

1. மரங்கொத்தி எவற்றை உண்கின்றது?

……

2. மரங்கொத்தி மரத்தை ஏன் கொத்துகின்றது?

……

06) விடுகைகளுக்கான விடை தருக?

1. கண்ணால் பார்க்கலாம். ஆனால் கைகளால் பிடிக்க முடியாது. அது என்ன?

……

2. யாரும் தயாரிக்காத கதவு தானே திறந்து தானே மூடும். அது என்ன?

……

07) பின்வரும் கூற்றுகள் சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுக.

1. " நிபுணர்கள் " உயர்திணை ஒருமைச் சொல்லாகும் (……)
2. " சிரித்தீர்கள் " முன்னிலை பன்மைச் சொல்லாகும் (……)

08) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

1. …… எங்கு செல்வேன் ? (நான் / அவன் / நீங்கள்)
2. …… நன்றாக நீர் அருந்தினார்கள். (அவர்கள் / நீ / நாம்)

09) கீழே தரப்பட்டுள்ள கவிதையில் தரப்பட்டுள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

பாதையில் நாமும் போகையிலே
பார்த்துக் கவனமாய்ச் சென்றிடுவோம்
…… நிதம்
விபத்திலிருந்து காத்திடுவோம்

10) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக

கழுவுதல் / சவர்க்காரமிட்டு / நன்றாக / கைகளை / வேண்டும்

……

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.lkedu.lk

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ் கருத்தினை தமிழ் எழுத்துக்களில் எழுதுக?

(i) ANIMALS .....


(ii) COMPUTER .....


12. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை தமிழில் எழுதுக?

(i) Open Your Book .....

(ii) May I Come In .....

13. இப் படத்தின் பெயரை ஆங்கிலத்தில் தருக.





....

14.பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ் கருத்தினை தமிழில் எழுதுக?


1. பஸ் நவதும் பொல .....
2. தும்ரிய ஸ்தானய .....

15. பின்வரும் வாக்கியங்களின் சிங்களக் கருத்தினை தமிழில் எழுதுக?

1. உங்களுக்கு என்ன வேண்டும்?.....
2. கமலன் பந்து எங்கே? .....

விடையைக் கணித்து எழுதுக?

16. தரப்பட்ட இலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய மிகப்பெரிய எண்ணும் மிகச்சிறிய எண்ணும் முறையே?



....

17.தரப்பட்ட எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது நடுவில் வருவது ?

3671 , 3716 , 3761 , 4617 .....

18. நூறினிடம் 8 , பத்தினிடம் 6 , ஒன்றினிடம் 2 , ஆயிரத்தினிடம் 4 ஆகவுள்ள எண் யாது?

.....

19. 

கடிகாரம் காட்டும் நேர த்தை பி.ப நேரம் எனக் கொண்டு நியம நேரமாக எழுதும் போது கிடைக்கும் விடை யாது ?

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.ikedu.lk

20. 1 லீற்றர் பாத்திரம் ஒன்றினுள் சிறிய போத்தல் ஒன்றினால் 4 தடவை நீர் ஊற்றிய போது நிறைந்தது எனின் இபோத்தலின் கொள்ளளவு யாது ?

.....

21. மணிக்கு 48km மாறா வேகத்தில் பயணிக்கும் புகையிரதம் மு.ப 8.45 மணிக்கு அநுராதபுரத்திலிருந்து புறப்பட்டு மு.ப 11.15 மணியளவில் கிளிநொச்சியை அடைந்தது. கிளிநொச்சிக்கும் அநுராதபுரத்திற்கு மிடையிலான பயணத்தூரம் யாது ?

.....

22 .கடைக்குச்சென்று ரூ.12.50 பெறுமதியான பென்சில்கள் 4 உம் ரூ.7.00 பெறுமதியான அழிறப்பர்கள் 5 உம் வாங்கிய மகாவிடம் கடைக்காரன் மீதிப்பணமாக 5 ரூபாய்க் குற்றிகள் மூன்றைக் கொடுத்தார் எனின் மகா கடைக்காரனிடம் கொடுத்த பணம் எவ்வளவு ?

.....

23. குளிர்பானம் தயாரிக்கும் போது முதலில் 1kg 50g சீனியும் இரண்டாவதாக 2kg 75g சீனியும் சேர்க்க ப்பட்டது. குளிர் பானத்திற்கு சேர்க்கப்பட்ட சீனியின் மொத்த அளவு யாது?

.....

24. சதுவின் வயது 8 வருடம் 9 மாதங்களும் அபியின் வயது 12 வருடங்கள் 4 மாதங்களும் ஆகும் இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை யாது ?

.....

25. ஒரு சதுர வடிவமானது 10 சம பங்குகளாகப் பிரிக்கப்பட்டு அதில் 2/5 பங்கு நிழற்றப் பட்டது எனின் நிழற்றாத பகுதியின் தசம வடிவம் யாது?

.....

26. மீரா ரூ 100, ரூ 50, ரூ 20 நாணயத் தாள்கள் 9 வைத்திருக்கிறாள். அவற்றின் மொத்தப் பெறுமதி ரூ 460.˙.- எனின், அவரிடமுள்ள ரூ 50 நாணயத்தாள்களின் எண்ணிக்கை?

.....

27. சம இடைத் தூரங்களில் நடப்பட்ட 6 மின் கம்பங்களுக்கிடையிலான தூரம் 100m ஆகும். 2 ஆவது மின் கம்பத்திற்கும் 5 ஆவது மின் கம்பத்திற்கும் இடையிலான தூரம் யாது?

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

28. ஒருவர் A என்ற இடத்திலிருந்து வடக்கு நோக்கி 30 மீற்றர் நடந்து சென்று பின்னர் அங்கிருந்து கிழக்கு நோக்கி 20 மீற்றர் நடந்து செல்கிறார். பின்னர் அங்கிருந்து தெற்கு நோக்கி 30 மீற்றர் நடந்து சென்று B என்ற இடத்தை அடைகிறார். இப்போது அவருக்கு எத்திசையில் A என்ற புள்ளி இருக்கின்றது.

.....

29. எனது நிறை 18kg 30g. எனது நண்பனின் நிறை 20kg 70g நாமிருவரும் நிலத்தராசில் ஏறிய போது தராசில் காட்டப்படும் நிறை யாது?

.....

30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க?

30. இலங்கையின் தேசியகீதத்தை இயற்றியவர்.

1) பண்டிதர் மு.நல்லதம்பி புலவர் 2) ஆனந்த சமரக்கோன்

3) C.W.W.கன்னங்கரா

31. இலங்கையின் தேசியகீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர்.

1) பண்டிதர் மு.நல்லதம்பி புலவர் 2) ஆனந்த சமரக்கோன்

3) C.W.W.கன்னங்கரா

32. அரச இலட்சினை பொறிக்கப்படும் இடம் அல்லாதது.

1) பாடநூல் 2) நாட்காட்டி 3) நாணயங்கள்

33. இலங்கையின் ஒட்டுப்பலகை தொழிற்சாலை அமைந்துள்ள இடம்.

1) ஒருவெல 2) ஜின்தோட்ட 3) நாத்தாண்டியா

34. ஆடையில் தீப்பிடித்தால் செய்யக் கூடாதது?

1) நிலத்தில் புரழுதல் 2) வேகமாக ஓடுதல் 3) தடித்த துணியால் போர்த்தல்

35. மண்சரிவு அபாயம் ஏற்படக்கூடிய மாவட்டங்களில் ஒன்று யாது?


1) மன்னார் 2) பதுளை 3) திருகோணமலை

36. பாடசாலையில் ஏற்படும் தீ விபத்தைத் தடுப்பதற்காக பாடசாலையில் செய்யப்பட்டிருக்கும் முன்னாயத்த நடவடிக்கை அல்லாதது?

1) வாளிகளில் நீர் நிரப்பி வைத்திருத்தல்

2) வாளிகளில் மணல் நிரப்பி வைத்தல்

3) பெற்றோர் ஒருவர் இருத்தல்

37.  உருவிலுள்ள உடுக்கோலத்தின் பெயர்?

1) வேட்டைக்காரன்

2) தென்சிலுவை

3) தேள்

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.ikeau.lk

38. நாற்று மேடையில் இருந்து பெறப்படும் பயிர் அல்லாதது.
    1) வெண்டி 2) மிளகாய் 3) தக்காளி

39. தாவரம் ஒன்று சிறப்பாக வளரத் தேவையானவை.
    1) சூடு, குளிர், வளி, நீர்
    2) சூரிய ஒளி, நீர், வளி, வளமான மண்
    3) மண், கூட்டெரு, பனி, நீர்

40. விசேட பாதையினூடாகப் பயணிக்கும் பொதுப் போக்குவரத்துச் சாதனம்.
    1) பேருந்து 2) புகையிரதம் 3) படகு

41. மிக நுட்பமான முறையில் கூடு கட்டும் பிராணி.
    1) தூக்கணாங்குருவி 2) குயில் 3) காகம்

42. ஒளடத பானம் தயாரிக்கப் பயன்படும் பூ
    1) ஆடாதோடை 2) பொன்னாவரை 3) வேம்பு

43. பொதி செய்யப்பட்ட பொருளொன்றைக் கொள்வனவு செய்யும் போது மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் அல்லாதது.
    1) உற்பத்தித் திகதி 2) தரச்சின்னம் 3) காலாவதித் திகதி

44. போசாக்கான உணவை உண்பதால் கிடைப்பது.
    1) உடலுக்குச் சக்தி 2) உடல் வளர்ச்சி 3) மேற்கூறிய இரண்டும்

45. கருங்கல் உடைப்பவர் கல் உடைக்கும் போது அணிந்திருப்பது
    1) தலைக்கவசம் 2) கண்ணாடி 3) ஏப்ரன்

46. தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான காரணமாக அமைவது
    1) அசுத்தமான நீர்
    2) மனிதனின் தவறான வாழ்க்கை கோலம்
    3) நுளம்புகளின் பெருக்கம்

47. இடி மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெற உயரமான கட்டடங்களில் பொருத்தப்படுவது.
    1) மின் காந்தம் 2) ஒலிபெருக்கி 3) இடிதாங்கி

48. திரவ நிலையில் காணப்படும் நீரின் இயல்பு அல்லாதது.
    1) மிதத்தும் இயல்பு
    2) உருகும் இயல்பு
    3) கரைக்கும் இயல்பு

49. பாரமான பொருளை இலகுவாக மேலே தூக்கப் பயன்படுவது.
    1) கப்பி 2) கயிறு 3) நெம்பு கோல்

50. துவிச்சக்கர வண்டியின் விளக்கு ஒளிரப் பயன்படுவது.
    1) டைனமோ 2) மின்கலம் 3) மின்குமிழ்

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

51. கால்கள் இல்லாத பிராணி

1) பாம்பு 2) கிளி 3) மரவட்டை

52. நமது முன்னோர் உப்பிடுவதன் மூலம் பாதுகாத்த உணவு.

1) மீன் 2) இறைச்சி 3) முருங்கைக்காய்

53. இன்னொருவர் நீரில் மூழ்குவதைக் கண்டால் யாது செய்ய வேண்டும்?

1) பாய்ந்து காப்பாற்றல் 2) உதவி கோரி சத்தமிடுதல்.

3) பேசாமல் இருத்தல்

54. இடியப்ப உரல் தயாரிக்கப்பயன்படும் மரம் எது?

1) மா 2) பூவரசு 3) தென்னை

55. புனிதத்தை பேணவும் கிருமிகளை அகற்றவும் பயன்படுத்தப்படும் தாவரம் எது?

1) இஞ்சி 2) அதிமதுரம் 3) மஞ்சள்

56. பாற்புட்டியை சுத்தம் செய்யும் முறை

1) குளிர் நீரில் கழுவுதல் 2) குளிர் நீரில் ஊறவிடல் 3) சுடுநீரில் அவித்தல்

57. பச்சையாக வெட்டிய எம் மரக்கறித் துண்டுகள் சிலவற்றைப் பாத்திரத்தில் உள்ள நீரில் இடும் போது அந்நீரின் நிறத்தை மாற்றக் கூடிய மரக்கறி

1) கரட் 2) கத்திரிக்காய் 3) பீற்றூட்

58. இலஞ்ச ஊழல் துஸ்பிரயோகத்திற்கு எதிராக முறைப்பாடு செய்ய அழைக்க வேண்டிய தொலைபேசி எண்

1) 1929 2) 1987 3) 1954

59. தாவரக்கொழுப்பு உணவாக அமையும் உணவு எது?

1) பட்டர் 2) மாஜரின் 3) பாற்கட்டி

60. எமது நல்வாழ்விற்ககாக நாம் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல பழக்க வழக்கங்கள் எனுந் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக? ஒவ் வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் உறுப்பமையவும் எழுதுதல் வேண்டும்

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---